2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: suspend *செய்யப்பட்ட* factory*-ஐ திரும்ப நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமா?*

திரு. G. அசோகன்: *ஆமாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள். அமருங்கள்.*

திரு. G. அசோகன்: *இல்லையென்றால், அந்த* workers*-க்கு வேலை இல்லாத காலங்களில் ஒரு நாளைக்கு 300 ரூபாய் கொடுத்தால் அவர்கள் வேறு வேலை பார்க்காமல், ஒழுங்காக வீட்டிலிருந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் சொல்வது முக்கியமான விஷயம், வேலைவாய்ப்பு குறித்து அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.*

(ஓ) காலாவதியான சுங்கச்சாவடிகளில் தொடர்ந்து சுங்கக் கட்டணம் வசூல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். நேரமின்மைக் காரணத்தை யாம் அறிவோம். ஆகவே இரண்டு மட்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒன்று சொல்லுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஓரிரு வார்த்தைகளில் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகின்றேன். குறிப்பாக, காலாவதியான சுங்கச்சாவடிகளில் தொடர்ந்து சுங்கக் கட்டணம் வசூல் செய்து கொண்டிருப்பதாகத் தகவல்கள் வந்திருக்கின்றன.* Comptroller and Auditor General*-ம் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள், இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.*